# ஆகஸ்ட் 5 - புனித மரியன்னை பேராலய அபிஷேகம்

நான்காம் நூற்றாண்டில் உரோமை நகரில் ஜாண் என்ற பிரபுவும் அவருடைய மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்கு குழந்தை இல்லை. இவர்கள் தங்கள் சொத்துக்களை தேவதாயின் பெயருக்கு விட்டுச் செல்ல விரும்பினர். லிபேரியுஸ் என்னும் பாப்பானவர் திருச்சபையை ஆண்டு வந்த காலத்தில் ஓர் இரவில் தேவதாய் இவர்களுக்கு காட்சி கொடுத்தாள். தன் பெயரால் ஓர் ஆலயம் அமைக்க வேண்டுமென்று அவள் கேட்டுக்கொண்டாள். ஆலயம் அமைக்கப்பட வேண்டிய இடத்தை தேவதாய் குறிப்பிட்டாள். அப்போது கடுங்கோடை காலம் பனியே பார்க்க முடியாது. ஆலயம் கட்டப்பட வேண்டிய இடத்தில் பனி சூழ்ந்திருக்கும் என அன்னை குறிப்பிட்டாள். 353ஆம் ஆண்டில் ஆலயம் அமைக்கக்பட்டது. பாப்பானவரான லிபேரியுஸ் காலத்தில் அந்த ஆலயம் கட்டப்பட்டதால் அது லிபேரியன் பேராலயம் என்று அழைக்கப்படுகிறது. ஆண்டவருடைய தொட்டிலின் புனித பண்டங்கள் அந்த ஆலயத்தில் இருப்பதால் "தொட்டில் புனித மரியாள் பேராலயம்" என்றும் அழைக்கப்படுகிறது. அது மிக பெரிதும் முக்கியம் வாய்ந்ததுமான ஆலயமாக இருப்பதால் "புனித மரியாளின் பேராலயம்" என்று அழைக்கப்படுகிறது.

**சிந்தனை:**

நமது வாழ்வில் ஒவ்வொரு நாளும் தேவதாய் நமக்கு அன்புச் செயல்கள் செய்து வருகிறாள். நம் அன்னையாக இருக்க அவள் எல்லையற்ற ஆசை கொண்டிருந்தாள். அவருடைய பிள்ளையாய் இருக்க நாமும் முன்வர வேண்டும். (புனித வின்சென்ட் தே பவுல்)

**செபம்:**

மரியாயே, என் மாதாவே, நான் பாவத்தில் விழாமல் என்னைக் காப்பாற்றும்.

